07.02.2024

அ.வ.எண். 334-2017

பி.வாசா.1 - சுப்பிரமணியம்

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

கடந்த 05.02.2024 குறுக்குவிசாரணையில் வாதி தரப்பில் என்னை 29.09.2003 தேதியிட்ட அடமான கடன் பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்று கேள்வி எழுப்பப்பட்டது, அதன் பின்பு வாதி கொடுத்த குறிப்பாணை அடிப்படையில் இன்று நான் நீதிமன்றத்தில், மேற்படி 29.09.2003 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அடமான கடன் பத்திரத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஏற்கனவே என் தரப்பில் பி.வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால் அசல் குறியீடு செய்யப்படவில்லை.

பி.வா.சா.ஆ.3 செல்லப்ப கவுண்டரின் மக்களுக்கு இடையே அவர்களது சித்தப்பா பழனிச்சாமி கவுண்டருடன் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம். பி.வா.சா.ஆ.5 இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக கேவியட் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவில் 2 ஏக்கர் 35 செண்ட் பூமிக்கும் 1947 கிரயப்படி என் தாத்தா தான் முழு உரிமையாளர் என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் நானும் என் குடும்பத்தாரும் தரப்பினர்கள் இல்லை. நாங்கள் யாரும் இந்த ஆவணத்தில் சாட்சியம் செய்யவில்லை. இந்த பாகப்பிரிவினை ஏற்பட்ட தேதியில் நாங்களோ எங்கள் குடும்பத்தாரோ உடன் இருந்தோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ளதுபோக வேறு சொத்துக்களும் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

நந்தவனம் பாளையத்தில் உள்ள சொத்துக்களை நாங்கள் அனுபவத்தில் உள்ளோம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நந்தவனம் பாளையம் புல எண். 141/1 என்ற நிலத்தை கிரயம் பெற்றுள்ளோம் என்றால் எனக்கு நினைவில்லை. தற்பொழுது அந்த சொத்து காசிலிங்கம்பாளையம் ஆள்வரைக்குள் வருகிறது. 141/1 என்ற புல எண்.A, B, C என்று உட்பிரிவாகியுள்ளது என்றால் எனக்கு

தெரியாது. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் 141/1 பி காசிலிங்கம்பாளையம் புல எண்ணானது மந்திரியப்ப கவுண்டர் மகன் செல்லமுத்து பெயரில் உட்பிரிவாகியுள்ளது என்றால் ஆமாம், வா.சா.ஆ.16 ஆக ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அதே புல எண்.141/1 ஏ க்கு என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் கந்தசாமி கவுண்டர் மனைவி வேலாத்தாள், சிவக்குமார் மனைவி செல்வி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

புல எண். 141/1டி க்கு மந்திரியப்ப கவுண்டர் மகன் செல்லமுத்து, கந்தசாமி கவுண்டர் மனைவி வேலாத்தாள், முத்துசாமி நாச்சியப்ப கவுண்டர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி செல்லப்ப கவுண்டர் அவருடைய 3 ல் ஒரு பாகத்தை புல எண்.141 ல் என் தாத்தாவிற்கு விற்பனை செய்துவிட்டார் என்றும், அதன் பின்பு அந்த சொத்துக்களை நான் அனுபவித்து வருவதற்கான வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரையில் மேற்படி சொத்து கிரையம் பெற்றுள்ளதை பொறுத்து சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில் புல எண்.141 ல் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தின் பட்டா எண்.58 அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.58 ற்கான கணிணி சிட்டா என்றால் சரிதான், அது எனது பெயரிலும் வாதிகள் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான், அது பி.வா.சா.ஆ.19 வாதி தரப்பில் இந்த ஆவணம் 06.02.2024 ல் தான் எடுக்கப்பட்டது என்று ஆட்சேபணை செய்யப்பட்டது. இந்த வாதிகளுக்கு கிரயம் கொடுத்த முத்துக்கவுண்டர் மகன் கருப்பசாமி பெயரிலும், அருணாச்சல கவுண்டர் மகன் மந்திரியப்ப கவுண்டர் பெயரிலும் தனித்தனியாக பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாதிகளுக்கு கிரயம் கொடுப்பதற்கு முன்பாகவே அவர்களது கிரய முன்னோர்கள் பெயரில் பட்டா இருந்து அவர்கள் தான் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

08.10.2001 தேதியில் கிரயம் பெற்றவர்கள் பட்டா மாறுதல் உத்தரவு பெற்று

அதன் அடிப்படையில் எங்களுக்கும், 1, 2 வாதிகள் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1, 2 வாதிகளும், அவர்களுக்கு தனித்தனியாக கொடுக்கப்பட்ட பட்டா பாஸ்புத்தகத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று அது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மந்திரியப்பன் நாச்சிமுத்து கிரயம் பெற்ற பின்னிட்டு பலமுறை என்னிடம் பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்று கேட்டார்கள் என்றால் இல்லை. அவர்கள் கேட்டு நான் ஒத்துக்கொள்ளாததால் தான் பாகப்பிரிவினை கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் தன்மையை மாற்ற கூடாது கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என இந்த வழக்கின் இடைமனு உத்தரவு வாங்கப்பட்டது என்றால் ஆமாம், மேற்கொண்டு கட்டிடம் எதுவும் கட்டக்கூடாது என STATUS QUO உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அந்த உத்தரவிலும் வாதிகளுக்கும், சொத்தில் உரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த உத்தரவை எதிர்த்து நான் மேல்முறையீடு செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் எதிர் உரை இடைமனு எண்.673/2001 உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி என்னுடைய எதிர் வாதத்தில் பி.வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் என் தாத்தா செல்லப்ப கவுண்டரிடம் கிரயம் வாங்கியது பொய் என்றும், அவர் அனுபவத்தில் இருந்தது பொய் என்றும், எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் மந்திரியப்ப கவுண்டர் ஒரு கிரயப் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்தார் என்றும், வேலாத்தாள் செல்வி என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றும், அவர்களையும் இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்க கேட்டு மனுத்தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனக்கு நினைவில்லை.

இந்த மனுவில் அவர்கள் ஏற்படுத்திய கிரயம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணம் எங்களது உரிமையை கட்டுப்படுத்தாது என்று சொல்லியுள்ளேன் என்றால் நினைவில்லை. தாவா சொத்திற்கு வடபுறம் கிழமேல் ரோடு உள்ளது. தாவா சொத்தின் கீழ்புறம், மேல்புறம் சிவக்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் ஆமாம். தென்புறமாக ஒரு பகுதி சிவக்குமாருக்கும், ஒரு பகுதி வள்ளியம்மாளுக்கும் பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. என்னுடையதாக நான் சொல்லும் தாவா

சொத்திற்கு நான்கு எல்லையில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சிவக்குமாருக்கு பூமி இருப்பது தெரியும். வழக்கு சொத்தில் மேற்குபுறமாக தென்வடலாக ஒரு தடம் செல்கிறது என்றால் இல்லை.

மேற்படி தென்வடல் தடம் வழியாகத்தான் வள்ளியம்மாள் அவரது பூமிக்கு சென்று வருகிறார் என்றால் இல்லை. தற்பொழுது வழக்கு சொத்தில் கட்டிடம் இடிந்து சிதிலமடைந்த நிலையில் உள்ளது என்றால் ஆமாம். 1 மற்றும் 3 வாதிகளும் நாங்களும் தற்பொழுது வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருக்கிறோம் என்றால் சரியல்ல. நந்தவனம் பாளையத்தில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொருத்து எங்களுடைய கூட்டு உடைமைதாரர்கள் மோசடியாக பத்திரம் ஏற்படுத்தி விட்டார்கள் என்று இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கான நடவடிக்கை இதுவரையில் எடுக்கவில்லை, இனிமேல் கொண்டு எடுக்கலாம் என்று நினைக்கிறேன். வழக்கு சொத்தில் எங்களுக்கு 3 ல் 1 பாகமும் வாதிகளுக்கு 3ல் 2 பாகமும் பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எனவே வாதி கோரியபடி 2/3 பாகத்திற்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/சுப்பிரமணியம்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2024.02.08 09:48:52 +0530

District Munsif
Sulur